TNVR090004422022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை ... திரு. R.V. ராஜகுமார், B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2023 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் திங்கள் கிழமை
இ.ம.எண். 4/2022
இன்
இ.ம.எண். 2/2022
இன்
இந்து திருமண முதலேற்பு மனு எண்.113/2022

XXXXXXXXX ... மனுதாரர்/மனுதாரர்

/எதிர்/

XXXXXXXXX ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தின் முன்பு 11.01.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. மாரியப்பன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. J. ரகுராமன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலைனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

உத்தரவு

மனு ஷெடியூலில் உள்ள விபரங்களை வரவழைக்க மனு ஷெடியூலில் விவரித்துள்ள நபர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இந்த மனுவை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

**2. மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் மனுவிலும், I.A.No.02/2022 லும் மனுதாரர். அசல் மனுவானது விவாகரத்து கோரி இந்த மனுவின் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. I.A.No.02/2022 மனுவானது ஜீவனாம்சம் கோரி இந்த மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் M/s. A.V.M.M. & Sons, M/s. Edison & Sons, M/s. M.V. Subramanian, M/s. M.V. Subramanian and Brothers ஆகிய நிறுவனங்களில் பங்குதாரராக உள்ளார். மேற்படி நிறுவனங்கள் A ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களிலிருந்து Dividend, லாபத்தொகை ஆகியவை எதிர்மனுதாரருக்கு வருடம்தோறும் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த விபரங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

மேலும், அசையா சொத்துக்களுக்கு மாத வாடகை மற்றும் சொத்து விபரம் ஆகியவை B ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு வாடகையில் ஒரு பகுதி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. எனவே வாடகை விவரமும், எதிர்மனுதாரருக்கு வாடகை பட்டுவாடா செய்யப்படும் விவரமும் வரவழைக்க இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது.

மேற்படி எதிர்மனுதாரருக்கு வருடம்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம், வருமான வரித்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த விவரங்களை வரவழைக்க C ஷெடியூலில் தெரிவிக்கப்படுகிறது. எதிர்மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள ஜீவனாம்ச தொகை கொடுப்பதற்கு போதுமான சொத்துக்களும், வருமானமும் உள்ளது என்பதை நிரூபிக்க இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**A ஷெடியூல்**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | கொண்டு வரவேண்டிய நபரின் பெயர் |
|---|---|---|

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

<table>
<tr><td>1.</td><td>M/s. A.V.M.M. & Sons,<br>168, North Cotton Road,<br>Tuticorin – 628 008.</td><td rowspan="4">1. M.V. சுப்பிரமணியம்<br>2. M.V. முத்துவேல்<br>3. M.V. சிவராமன்<br>4. M.V. லட்சுமணன்<br><br>மேற்படி எதிர்மனுதாரர் கார்த்திக் மாரிமுத்து என்பவர் பெயரில் மேற்படி நிறுவனங்களில் உள்ள பங்குகள், சொத்துக்கள் மற்றும் லாப தொகை விவரங்களை தெரிவிக்க ஆவணங்களை கொண்டு வந்து சாட்சி சொல்லுதல்.</td></tr>
<tr><td>2.</td><td>M/s. Edison & Sons,<br>168, North Cotton Road,<br>Tuticorin – 628 008.</td></tr>
<tr><td>3.</td><td>M/s. M.V. Subramanian,<br>168, North Cotton Road,<br>Tuticorin – 628 008.</td></tr>
<tr><td>4.</td><td>M/s. M.V. Subramanian and Brothers,<br>168, North Cotton Road,<br>Tuticorin – 628 008.</td></tr>
</table>

<u>B ஷெடியூல்</u>

| வ.எண். | சொத்து விபரம் | கொண்டு வரவேண்டிய நபரின் பெயர் |
|---|---|---|
| 1. | <u>அசையா சொத்துக்கள்</u><br>1) GE–N.C.Road, Tuticorin, 2) G.F–N.C.Road, Tuticorin, 3) 6G to 161–N.C.Road, Tuticorin, 4) 6J, 6K & 16T–N.C.Road, Tuticorin, 5) 6L–N.C.Road, Tuticorin, 6) 6M–N.C.Road, Tuticorin, 7) 6N–N.C.Road, Tuticorin, 8) 6O–N.C.Road, Tuticorin, 9) 6P–N.C.Road, Tuticorin, 10) 6Q & 6Q1–N.C.Road, Tuticorin, 11) 16J & 16J/1–N.C.Road, Tuticorin, 12) 16K–N.C.Road, Tuticorin, 13) 16L & 16M–N.C.Road, Tuticorin, 14) 16N & 16O–N.C.Road, Tuticorin, 15) 16P to 16S–N.C.Road, Tuticorin, 16) 16U–N.C.Road, Tuticorin, 17) 16V & 16W–N.C.Road, Tuticorin, 18) 16X–N.C.Road, Tuticorin, 19) 16Y–N.C.Road, Tuticorin, 20) 20D–N.C.Road, Tuticorin, 21) 20E– | 1. M.V. சுப்பிரமணியம்<br>2. M.V. முத்துவேல்<br>3. M.V. சிவராமன்<br>4. M.V. லட்சுமணன்<br>மேற்படி எதிர்மனுதாரர் கார்த்திக் மாரிமுத்து என்பவர் பெயரில் உள்ள சொத்துக்களில் அவருக்குண்டான பங்குகளின் முதலீடு, லாப தொகை விவரங்களை தெரிவிக்கும் ஆவணங்களை கொண்டு வந்து சாட்சி சொல்லுதல். |

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

| | | |
|---|---|---|
| | N.C.Road, Tuticorin | |
| 2. | 1) 19-W.G.C.Road, Tuticorin,<br>2) 19A-W.G.C.Road, Tuticorin,<br>3) 19B-W.G.C.Road, Tuticorin,<br>4) 19C-W.G.C.Road, Tuticorin, | 1. M.V. சுப்பிரமணியம்<br>2. M.V. முத்துவேல்<br>3. M.V. சிவராமன்<br>4. M.V. லட்சுமணன்<br>மேற்படி எதிர்மனுதாரர் கார்த்திக் மாரிமுத்து என்பவர் பெயரில் உள்ள சொத்துக்களில் அவருக்குண்டான பங்கு முதலீடு, லாப தொகை விவரங்களை தெரிவிக்கும் ஆவணங்களை கொண்டு வந்து சாட்சி சொல்லுதல். |
| 3. | 1) 167A-N.C.Road, Tuticorin, 2) 168-N.C.Road, Tuticorin, 3) 169-N.C.Road, Tuticorin, 4) 170-N.C.Road, Tuticorin, 5) 171-N.C.Road, Tuticorin, 6) 172-N.C.Road, Tuticorin, 7) 172A-N.C.Road, Tuticorin, 8) 172B-N.C.Road, Tuticorin, 9) 173-N.C.Road, Tuticorin, 10) 174-N.C.Road, Tuticorin, 11) 175-N.C.Road, Tuticorin, 12) 176-N.C.Road, Tuticorin, 13) 177-N.C.Road, Tuticorin, 14) 178-N.C.Road, Tuticorin, 15) 179-N.C.Road, Tuticorin, 16) 180-N.C.Road, Tuticorin, 17) 181-N.C.Road, Tuticorin, 18) 184-N.C.Road, Tuticorin, 19) 154/1-N.C.Road, Tuticorin, 20) 185-N.C.Road, Tuticorin, 21) 186-N.C.Road, Tuticorin, 22) 186A-N.C.Road, Tuticorin, 23) 186B-N.C.Road, Tuticorin, 24) 187-N.C.Road, Tuticorin, 25) 188-N.C.Road, Tuticorin, 26) 189-N.C.Road, Tuticorin, 27 190- | 1. M.V. சுப்பிரமணியம்<br>2. M.V. முத்துவேல்<br>3. M.V. சிவராமன்<br>4. M.V. லட்சுமணன்<br><br>மேற்படி எதிர்மனுதாரர் கார்த்திக் மாரிமுத்து என்பவர் பெயரில் உள்ள சொத்துக்களில் அவருக்குண்டான பங்குகளின் விவரங்களை தெரிவிக்கும் ஆவணங்களை கொண்டு வந்து சாட்சி சொல்லுதல். |

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

| | | |
|---|---|---|
| | N.C.Road, Tuticorin, 28) 191-N.C.Road, Tuticorin, 29) 192-N.C.Road, Tuticorin, | |
| 4. | A.V.M. Hospital (P) Ltd.,<br>135, Palayamkottai Road,<br>PSP Nagar, Toovipuram,<br>Tuticorin. | 1. M.V. சுப்பிரமணியம்<br>2. M.V. முத்துவேல்<br>3. M.V. சிவராமன்<br>4. M.V. லட்சுமணன்<br>மேற்படி எதிர்மனுதாரர் கார்த்திக் மாரிமுத்து என்பவர் பெயரில் உள்ள சொத்துக்களில் அவருக்குண்டான பங்குகளின் விவரங்களை தெரிவிக்கும் ஆவணங்களை கொண்டு வந்து சாட்சி சொல்லுதல். |
| 5. | A.V.M. Jewellers (P) Ltd.,<br>R543+265, E Coast Road,<br>Tuticorin. | |
| 6. | A.V.M. Kamalavel Mahal,<br>4/247, Ettayapuram Road,<br>TNHB Colony,<br>State Bank Colony, KTC Nagar,<br>Tuticorin. | |

<u>C ஷெடியூல்</u>

| வ.எண். | ஆவணங்களின் விபரம் | கொண்டு வரவேண்டிய நபர் |
|---|---|---|
| 1. | கார்த்திக் மாரிமுத்து, த.பெ. முத்துக்குமார் என்பவரின் 2019-2020, 2020-2021, 2021-2022 ஆகிய ஆண்டுகளில் சமர்ப்பித்த வருமானவரி மற்றும் அத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ள படிவங்கள் மற்றும் ஆவணம். | உதவி ஆணையர், வருமானவரி துறை அலுவலகம், தூத்துக்குடி. |

எனவே, மேற்க்கண்ட விபரங்களை வரவழைக்க மேற்படி ஷெடியூலில் விவரித்துள்ள நபர்களுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>எதிருரையின் சுருக்கம் :-</u>

மனுதாரரின் மனு தவறானது. மனுப்படி எந்த பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுவும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரரின்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும். எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானது. அவற்றை மனுதாரரே தகுந்த ஆவணங்கள் வாயிலாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் மனுவில் 4 வது பாராவில் மேற்படி எதிர்மனுதாரர் மனு ஷெடியூலில் உள்ள நிறுவனங்களில் பங்குதாரராக உள்ளதாகவும், அதன் நிறுவனங்கள் A ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனங்களில் இருந்து Dividend லாபத்தொகை ஆகியவை எதிர்மனுதாரருக்கு வருடம்தோறும் கொடுக்கப்பட்டு வருகிறது என்றும், அந்த விபரங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மாத வாடகை மற்றும் சொத்து விபரம் ஆகியவை B ஷெடியூலாக காட்டப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு வாடகையில் ஒரு பகுதி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே வாடகை விவரமும், எதிர்மனுதாரருக்கு வாடகை பட்டுவாடா செய்யப்படும் விவரமும் வரவழைக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிர்மனுதாரருக்கு வருடம்தோறும் கிடைக்கக்கூடிய வருமானம், வருமான வரித்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த விவரங்களை வரவழைக்க C ஷெடியூலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுதாரருக்கு மனுவில் கோரியுள்ள ஜீவனாம்ச தொகை கொடுப்பதற்கு போதுமான சொத்துக்களும், வருமானமும் உள்ளது என்பதை நிரூபிக்க இந்த மனு தாக்கல் செய்துள்ளதாகவும் கூறுவது சுத்தப் பொய்யானதாகும். அசல் மனுவை காலம் தாழ்த்தவே மேற்படி பொய்யும், புரட்டுகளையும் கூறி மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Rajnesh vs Neha on 4 November 2020 என்ற வழக்கில் இடைக்கால ஜீவனாம்சத் தொகை கேட்கும் மனுதாரர் முதலில் மனுதாரர் என்ன வேலையில், எங்கு வேலை பார்க்கிறார் என்ற விபரம், அதன்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

மூலம் அவர் பெறும் சம்பளம், மனுதாரருக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், அவருக்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் பற்றிய விபரம், மனுதாரர் வசம் உள்ள நகைகள் பற்றிய விபரம் முதலியவை அடங்கிய அவிடவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிற்பாடு எதிர்மனுதாரருக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பற்றிய அவிடவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று மேற்படி உச்சநீதிமன்றத் தீர்ப்பில் வழிகாட்டு நெறிமுறைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரர் அப்படி எந்த ஒரு அவிடவிட்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலும் மனுதாரர் தன்னை முதல் மற்றும் குறுக்கு விசாரணைக்கு உடப்டுத்தாமல் எதிர்மனுதாரர் கைவசம் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் நேரிடையாக ஒப்படைக்க உத்தரவிட மனு தாக்கல் செய்திருப்பது மேற்படி உச்சநீதிமன்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கு முரணானதாகும். முதலில் மனுதாரர் தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தி, மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சிக்கு வாய்தா ஏற்படும்போதுதான் இம்மனுவை சட்டப்படி தாக்கல் செய்ய இயலும். மேலும் எதிர்மனுதாரர் விவாகரத்து வழங்க தயாராக இருப்பதாக தனது கவுண்டரில் கூறிய பின்பும் இ.ம.எண்.2/2022 மனுவை மேல்நடத்தாமல் சட்டத்திற்கு புறம்பாக வழக்கை இழுத்தடித்து தகாத பலன் பெறுவதற்காக பின்யோசனையின் பேரில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுதாரர் தரப்பில் அவருக்கு சொந்தமான சொத்துக்கள் சம்பந்தமாக அவிடவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பட்சத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் சொத்து சம்பந்தமான அவிடவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதிர்மனுதாரர் தயாராக உள்ளார். மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் அவிடவிட்டை கொண்டு ஜீவனாம்ச தொகையை நீதிமன்றம் நிர்ணயிக்க இயலும். ஒருவேளை எதிர்மனுதாரர் அவிடவிட்டு தாக்கல் செய்ய தவறும்பட்சத்தில் அவருக்கு எதிராக பாதகமான அனுமானம் (Adverse inference) நீதிமன்றமே எடுக்க முடியும்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

என்பதே மேற்படி தீர்ப்பில் தெளிவாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புக்கு மாறாக மனுதாரர் தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திக் கொள்ளாமல் நேரடியான சட்ட வழிமுறைகளை பின்பற்றாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனு சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேற்கண்ட சட்டம், சார்ந்த சங்கதிகள் எதையும் மனுதாரர் மனுவில் குறிப்பிடவில்லை. மனு பரிகாரத்திற்கேற்ற காரணம் எதுவும் மனுவில் துலக்கப்படவில்லை. மேலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் U/s.76(2) C.R.P. என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி C.R.P.ல் விதி 76 ஆனது பொது ஆவணங்களுக்கான நகல்கள் பெறுவது குறித்து கூறப்பட்டுள்ளது. மேற்படி விதி தனிநபர்களுக்கு பொருந்தாது. எனவே, மனுதாரர் இம்மனுவை சட்டப்படி தாக்கல் செய்ய இயலாது.

மேலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் நீதிமன்றத்தில் HMOP.No.218/2021 என்ற பரஸ்பர விவாகரத்து மனு தாக்கல் செய்து, பின்னர் இந்நிர் மனுதாரர் மேற்படி மனுவை மேல்நடத்தாமல் வேண்டுமென்றே 22.07.2022 ம் தேதி வாபஸ் பெற்றுள்ளார். தற்போது மனுதாரர் விவாகரத்து கோரி அசல் மனு தாக்கல் செய்து இந்த எதிர்மனுதாரர் இந்த அசல் மனுவில் நீதிமன்றத்தில் ஆஜரான அன்றே மேற்படி மனுவை விரைவாக நடத்த அன்றைய தினமே தனது தரப்பு எதிர்உரை தாக்கல் செய்து விவாகரத்து வழங்க சம்மதம் தெரிவித்த பின்பும், இவ்வழக்கை இழுத்தடித்து எதிர்மனுதாரருக்கு வீண் அலைக்கழிவும், மன உளைச்சலும் உண்டாக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார். மேலும், இடைக்கால ஜீவனாம்சம் கோரும் மனுக்களை காலம் தாழ்த்தாமல் 60 நாட்களுக்குள் விசாரித்து உத்தரவிட வேண்டும் என்பது நிலையான சட்டமாகும். இந்த எதிர்மனுதாரர் அசல் மனுவையே 60 நாட்களுக்குள் முடித்துவிட ஒத்துழைப்பு கொடுத்தும்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

நிரந்தர ஜீவனாம்சம் கோர வேறு பல வழிகள் இந்த மனுதாரருக்கு உள்ள நிலையில் அதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளாமல் அசல் மனுவை இந்த மனுதாரர் மேல்நடத்த விடாமல் பல இடைமனுக்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடித்து வருகிறார். மேற்படி பரஸ்பர விவாகரத்து மனுவில் எதிர்மனுதாரர் மீது எந்த குற்றச்சாட்டும் முன் வைக்காத நிலையில் அசல் மனுவில் பொய்யான சங்கதிகளைக் கூறி மனுத்தாக்கல் செய்து பின்னீட்டு இதுபோன்று பல்வேறு இடைமனுக்களை ஒன்றன்பின் ஒன்றாக மனுதாரர் தாக்கல் செய்வதிலிருந்தே மனுதாரரின் கெட்ட எண்ணம் நீதிமன்றத்திற்கு நன்கு தெரிய வருகிறது. மேலும், எதிர்மனுதாரர் காவல் துறையில் பொய்யான புகார் கொடுத்து வீண் அலைக்கழிவும் செய்து வருகிறார். எனவே, மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் அதிகபட்ச வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

6. தற்போது மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதா என்பதே இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை.

7. இவ்வழக்கில் மேற்படி மனுதாரர் தனக்கும், மேற்படி எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி அசல் வழக்கு HMOP.No.113/2022 தாக்கல் செய்து உள்ளார். மேற்படி இடைக்கால மனுவில் இடைக்கால பராமரிப்பு தொகை கோரி IA.No.2/2022 தாக்கல் செய்து உள்ளார். மேற்படி மனுவில் மேற்படி எதிர்மனுதாரரின் மாத வருமானம் அவரது குடும்ப வசதி மற்றும் குடும்ப சொத்துக்கள் மற்றும்

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

நிர்வாகங்களிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தை கண்டறிவதற்காக மேற்படி எதிர்மனுதாரரின் கைவசம் உள்ள அவரது வங்கி கணக்கு புத்தகங்கள் 2018 முதல் 2022 வரையான வருமான வரி கணக்குகள் அடங்கிய படிவங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி இம்மனுவை தாக்கல் செய்து உள்ளார். இவ்வழக்கில் மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் அவரது கை வசம் உள்ள வங்கி கணக்கு புத்தகங்கள் 2021, 2022 வருடத்திற்கான வருமான வரி கணக்குகள் ஆகியவைகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் நகல் மேற்படி மனுதாரருக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இரு தரப்பிலும் Affidavit of asset and liability தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

**8.** ஆனால், மேற்படி மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட asset and liability Affidavit ல் காலம் I பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், அவரது வங்கி கணக்குகளில் உள்ள டெபாசிட்கள் எதற்காக செய்யப்பட்டுள்ளது என்று தெரியப்படுத்த வேண்டும் என்றும், 3 Tandai India Private Limited வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட சில டெபாசிட்கள் மற்றும் வருமான வரி கணக்குகளில் காட்டப்பட்ட தொகை எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட asset and liability அபிடவிட்டில் குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே அவரது உண்மையான வருமானத்தை அறிய இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் கைவசம் உள்ள அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் மேற்படி மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் வழங்க தொகையை தீர்மானிப்பதற்கு மேற்படி எதிர்மனுதாரரின் வருமானத்தை அறிவதற்காக தான் மேற்படி எதிர்மனுதாரரின் வருமானம் மற்றும் வசதி வாய்ப்புகளையும் அறிவது நோக்கமாக உள்ள சூழ்நிலையில் அவற்றை அறிய போதுமான ஆவணங்களாக அவரது சம்பள பட்டியல், வங்கி

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

கணக்கு நகல்கள் எதிர்மனுதாரர் மற்றும் அவரது நிறுவனத்தின் வருமான வரி கணக்குகள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணங்களே மேற்படி மனுவை முடிவு செய்ய போதுமானதாக உள்ளது. மேற்படி உரிமையியல் நடைமுறை விதி 76 ன் கீழ் பொது ஆவணம் ஒன்றின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்ய தான் வழிவகை உள்ளதே தவிர தனிப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வழங்க கோருவதற்கு வழிவகை இல்லை. மேலும், மேற்படி எதிர்மனுதாரரின் வருமான வரி கணக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதல்ல என்று தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R V RAJAKUMAR Digitally signed by R V RAJAKUMAR

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
இ.ம.எண்.4/2022 இன்
இ.ம.எண்.3/2022 இன்
இ.தி.மு.ம.எண்.113/2022
உத்தரவு
நாள். 06.02.2023